Election Commission
Transnational Government of Tamil Eelam
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
தேர்தல் ஆணையம்

Mr. Ranjan Manoranjan (Chief) Ms. Anoja Muthusamy Mr. Ramesh Balakrishnar
Election.commissioner@tgte.org

ஊடக வெளியீடு

May 7, 2024

"கனடாவில் சில தொகுதிகளில் தேர்தல் மே 12ஆம் தேதி நடைபெறும்" என்று தலைப்பிட்ட போலி அறிக்கை ஒன்று நேற்று வெளிவந்தது என்று எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தலைமை தேர்தல் ஆணையத்தின் அவசர செய்தி அறிக்கை என்றும் அதனை ஊடகங்கள் பிரசுரித்து பகிர வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த கடிதத்தை நான் வெளியிடவும் இல்லை அதில் உள்ள கையெழுத்து என்னுடையதும் அல்ல என்பதை இத்தால் உறுதிப்பாடுக விரும்புகிறேன். இந்த ஊடக வெளியீடு போலியாக செய்யப்பட்டுள்ளது என்பதை உணர்கின்றேன். இந்தச் செயலை கண்டிக்கின்றேன்.

ஆனாலும் கனடாவின் தேர்தல் ஆணையாளர் திரு. சிவபாலசுந்தரம் அவர்களும் திரு. பொன்னம்பலம் மற்றும் தலைமை தேர்தல் ஆணையாளரான நானும் குறிப்பிட்ட சந்திப்பை நேற்றைய தினம் (மே 6 ஆம் திகதி) மேற்கொண்டிருந்தோம். நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தேர்தல் முறையீட்டு சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் திரு. பொன்னம்பலம் அவர்கள் சில பரிந்துரைகளை முன்வெய்த்தார். ஆயினும் கனடாவின் தேர்தல் ஆணையாளர் திரு. சிவபாலசுந்தரம் அவர்கள் அந்தப் பரிந்துரைகளுக்கு உடன்படவில்லை. இது குறித்து தனது உதவியாளர்களுடன் கதைத்துவிட்டு பதில் கூறுவதாகத்தான் சொல்லியிருந்தார் என்பதையும் இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

போலியான செய்திகளை வெளியிட்டு மக்களைக் குழப்பும் செயல்கள் நிறுத்தப்படவேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

ரஞ்சன் மனோரஞ்சன்
தலைமை தேர்தல் ஆணையாளர்